OS: 1/2022

Date: 27.10.2025

பெயர் : கந்தசாமி **(வா.சா.1) ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**.

<u>**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**</u>

1. நான் இந்த வழக்கின் 3ம் வாதி என்றால் ஆமாம். இந்த வழக்கை நான் பாகப்பிரிவனை கோரி தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் ஆமாம்.மொத்தம் எத்தனை பேர் சேர்த்து தாவாவை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சின்னதம்பி, சின்னதாயி, கந்தசாமி, பழனியம்மாள், பெரமாயி, கந்தம்மாள் ஆகியோர்கள் சேர்ந்து சீரங்கன் மற்றும் சின்னபெருமன் ஆகியோர்களுக்கு எதிராக தாக்கல் செய்திருக்கிறோம்.

2. மொத்தம் எத்தனை அயிட்ட சொத்துக்களுக்காக இந்த தாவாவை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் 4 அயிட்ட சொத்திற்காக தாக்கல் செய்திருக்கிறோம். வழக்கு சங்கதிகளை நான்தான் வழக்கறிஞருக்கு சொன்னேனா என்றால் ஆமாம். நான் பொய்யாக சாட்சியம் அளித்தால் எனது வழக்கை தள்ளுபடி செய்ய எனக்கு ஆட்சேபனையில்லை என்றால் இல்லை.

3. எனக்கு படிக்க தெரியும் என்றால் இல்லை. எழுத, படிக்க தெரியாது. நான் 5 அயிட்ட சொத்துக்களின்பேரில் வழக்கு தாக்கல் செய்யவில்லையா என்றால் ஆமாம். 1அயிட்ட சொத்து கீழ் நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது எனவே தாக்கல் செய்யவில்லை. நான் 5 அயிட்டமாக சொத்துக்களை தாவாவில் காட்டியிருந்து அது 4 அயிட்டமாக இல்லை என்றால் தாவாவை தள்ளுபடி செய்துவிடலாமா என்றால் செய்துவிடலாம்.

4. இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது இந்த வழக்கின் 2ம் பிரதிவாதியான சீரங்கன் ஓமலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் என் மீதும், மற்ற வாதிகள் மீதும் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். இந்த வழக்கின் சொத்தும், ஓமலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் சீரங்கன் தாக்கல் செய்திருக்கும் வழக்கின் சொத்தும் ஒன்றுதான் என்றால் ஆமாம்.

5. இந்த வழக்கின் வாதிகள் தான் ஓமலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் என்றால் ஆமாம். ஓமலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கின் தாவா எண்.57/2022 என்றால் எனக்க படிப்பறிவு இல்லாததால் அது தெரியவில்லை. நான் சாட்சியம் அளிக்கும் இந்த தாவாவின் வழக்கு எண்.1/2022 என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் தெரியவில்லை. சீரங்கன் தாக்கல் செய்திருக்கும் வழக்கில் நான் வழக்கறிஞர் வைத்து வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் ஆமாம்.

6. சீரங்கன் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் குறித்து வாதிகளான நாங்கள் ஏற்படுத்தி கொடுத்த பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கேட்டிருக்கிறார் என்றால் ஆமாம். இந்த இரண்டு வழக்கும் நிலுவையில் இருந்துவந்த சமயத்தில் நான் சென்னை உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கை மட்டும் விரைவாக நடத்தவேண்டும் என்று பரிகாரம் பெற்றேன் என்றால் ஆமாம்.

7. நான் கீழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் வழக்கையும் இந்த வழக்கோடு சேர்த்து நடத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்தில் என்ன தீர்ப்பாகிறதோ அதை ஏற்றுக்கொள்கிறேன். அதுபோல அந்த நீதிமன்றத்தில் என்ன தீர்ப்பாகிறதோ அதை ஏற்றுக்கொள்கிறேன். எனவே நடவடிக்கை எடுக்கவில்லை. இரண்டு வழக்கின் சொத்துக்களும் தரப்பினர்களும் ஒன்று என்ற நிலையில் இருவேறு மாறுபட்ட தீர்ப்புகளை வழங்க இயலாது என்பதால்,

ஒரே நீதிமன்றத்தில் விசாரித்துதான் தீர்ப்பு பெறவேண்டும் என்பதால் இரண்டு வழக்கையும் தனித்தனியாக நடத்த இயலாது என்றால் சரியல்ல.

8. எனவே, இரண்டு வழக்கையும் ஒன்றாக நடத்த 2ம் பிரதிவாதி நடவடிக்கை எடுக்க இருக்கிறார் என்றால் நடவடிக்கை எடுக்கட்டும். இருவழக்கையும் ஒரே நீதிமன்றத்தில் விசாரிக்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் இல்லை.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

(ஒப்பம்/–T.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.